TNKK090058952022

Presented on : 06-06-2022
Registered on : 30-03-2023
Decided on : 21-06-2023
Duration : 1 years, 0 months, 15 days

| குற்றவியல் நீதித்துறை நடுவா் எண் II பத்மனாபபுரம்<br>முன்னிலை திருமதி. எம். மணிமேகலா, **M.A.,M.L.,**<br>2023ம் ஆண்டு ஜுன் திங்கள் 21ம் நாள் புதன் கிழமை<br><u>சுருக்கு விசாரணை வழக்கு எண். 222/2023</u> | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் | மாநில அரசு சார்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>திருவட்டார் காவல் நிலையம்<br>குற்ற எண்.58/2019 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் | திருமதி. ஜானகி B.A., B.L., |
| எதிரிகள் | 1. முகமது பெரோஸ்கான் (38/2019)<br>த/பெ. முகமது அப்துல் காதர்<br>சாமி விளை,<br>காஞ்சிரங்கோடு<br><br>2. முகமது நிஷ்தார் ( 33/2019)<br>த/பெ, முகமது அப்துல் காதர்<br>சாமி விளை,<br>காஞ்சிரங்கோடு |
| எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் | திரு.R.M. பிரபின் |



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:52:24 +0530

இவ்வழக்கானது 30.03.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் சுருக்கு விசாரணை வழக்கு எண். 222/2023 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு 20.06.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் திருமதி. ஜானகி B.A., B.L., கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M. பிரபின் அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.

**தீர்ப்புரை**

திருவட்டார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் 1, 2ம் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 506(1)ன் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதியறிக்கையை பரிசீலனை செய்து 30.03.2023ம் தேதியன்று சுருக்கு விசாரணை வழக்கு எண். 222/2023 ஆக 1, 2ம் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323 (2 எண்ணிக்கைகள்) மற்றும் 506(1)ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகள் ஆஜராவதற்காக வழக்கினை 18.04.2023ம் தேதியன்று முதல் வாய்தாவிற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

3. எதிரிக.ள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டு,



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:52:35 +0530

ஆவணங்களை படித்து பார்க்க போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1, 2ம் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323 (2 எண்ணிக்கைகள்) மற்றும் 506(1)ன் கீழ் 13.06.2023 அன்று குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவிய போது, எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து வழக்கினை நடத்த விரும்புவதாக கூறினார்கள்.

4. எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.தா.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. அ.சா.1 ராஜா சுரேஷ் குமார், அ.சா.2 அனிஷ் அ.சா.3 செந்தமிழ்வாசன் ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.4 ரமேஷ் உதவி ஆய்வாளர், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார்.

5. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> –

கடந்த 20.02.2019 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு இரவிப்புதுர் கடை, நெடுமாறன் ஹோட்டலில் வைத்து 1,2 எதிரிகள் புகார்தாரர் சுரேஷ்குமாரையும், சாட்சி 2 அனிஷ்யையும் பார்த்து தேவிடியா மகன்களே என கெட்டவார்த்தைகளால் பேசி, 1ம் எதிரி புகார்தாரை விறகு கட்டையால் உச்சந்தலையில் ஓங்கி அடித்து இரத்த காயங்கள் ஏற்படுத்தியும், 2 எதிரிகளும் புகார்தாரரை தரையில் போட்டு மாறி மாறி மிதித்தும் இழுத்தும், இரண்டு கால் விரல்களிலும் அடித்து காயங்கள்



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:52:46 +0530

ஏற்படுத்தியும், சாட்சி 2 அனிஷ்யை 1ம் எதிரி விறகுகட்டையால் வலது முழங்கை முட்டில் ஓங்கி அடித்து சதைவு காயம் ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் தங்களது கைகளை புகார்தாரர், சாட்சி 2க்கு நேராக காட்டி அவர்களை பார்த்து இன்று தப்பி விட்டீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளனர்.

6. கடந்த 22.02.2019 ம் தேதி மாலை 06.00 மணிக்கு நிலைய பொறுப்பிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மோசஸ் குழித்துறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இண்டிமேசனை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த புகார்தாரர் அ.சா.1 ராஜ சுரேஷ்குமார் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.2 ஐ பெற்று நிலைய குற்ற எண் 58/2019 இதச பிரிவுகள் 294(பி), 323 506(1) , 379 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஐ பதிவு செய்துள்ளார்.

7. பின்னர் உதவி ஆய்வாளர் ராமர் 2302.2019 ம் தேதி 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும், பார்வையிட்டு சாட்சிகள் மணி மற்றும் சிலம்பரசன் வரைபடம் அ.சா.ஆ.5 , வரைபடம் அ.சா.6 தயார் செய்துள்ளார்.

8. பின்னர் வழக்கின் புகார்தாரர் ராஜ சுரேஷ்குமார் சம்பவ சாட்சிகள் அனிஷ், செந்தமிழ்வாசன், பார்வை மகஜர் சாட்சிகள் மணி மற்றும் சிலம்பரசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் உதவி ஆய்வாளர் மோசஸ், உதவி ஆய்வாளர் ஞானதாஸ், உதவி ஆய்வாளர் மோசஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா1 ராஜ சுரேஷ்குமார் மற்றும் அ.சா.2 அனிஷ்க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அஜின் டேனியேல்



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:52:58 +0530

என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் (அ.சா.ஆ 7, அ.சா.ஆ,8) பெற்று, தனது விசாரணையின் அடிப்படையில் இதச பிரிவு 379 ஐ குறைவு செய்து பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 தயார் செய்து தனது விசாரணையை முடித்து 1,2 எதிரிகளுக்கு எதிராக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323 506(1) ன் கீழ் 21.05.2022 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் விளக்கி வினவிய போது எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை

10. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்திருந்த போதிலும், நீதிமன்ற ஆவணங்கள் அடிப்படையில் எதிரிகள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கலாம் என்று வாதிட்டார்.

11. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 ராஜ சுரேஷ்குமார் அ.சா.2 அனிஷ், அ.சா.3 செந்தமிழ்வாசன் ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார் எனவும், அரசு தரப்பில் அரசு தரப்பு வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள்



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:53:11 +0530

குற்றவாளிகள் இல்லை என விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**12. <u>தீர்வுக்குரிய பிரச்சினை</u>**

இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில் 1,2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 323 (2 எண்ணிக்கைகள்) 506(1)ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அக்குற்றச்சாட்டுக்களின் பேரில் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டியவரா? என்பதேயாகும்.

13. இவ்வழக்கின் சம்பவமானது 20.02.2019 ம் தேதி மாலை 04.00 மணிக்கு நடைபெற்றுள்ளது. புகார் மனு அ சா ஆ 2 ஆனது 22.02.2019 தேதி இரவு 09.30 மணியளவில் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்யப்பட்டுள்ளது.

14. அ.சா.1 ராஜ சுரேஷ்குமார் தனது சாட்சியத்தில் தான் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாகவும் புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், அ.சா.2 அனிஷ் தனது சாட்சியத்தில் சம்பவ சமயத்தில் இருட்டாக இருந்ததால் என்ன நடந்தது தெரியவில்லை என்றும், அ, சா3 செந்தமிழ்வாசன் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ள நிலையில் மேற்படி சாட்சிகளிடம் அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் 154(1)ன் படி கேள்விகள் கேட்கப்பட்டு, அரசு தரப்பிற்கு சாதகமாக எந்தவிதமான பதில்களும் பெறமுடியவில்லை.

15. புகார்தாரரான அ.சா.1 ராஜ சுரேஷ்குமார், அ.சா.2 அனிஷ் அசா3 செந்தமிழ்வாசன் ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:53:23 +0530

சாட்சியமளிக்காத நிலையில் பிற சாட்சிகளை விசாரிப்பதில் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என பிற பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு, வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.4 ரமேஷ் உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டார்.

16. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் போது புகார்தாரர் அ.சா.1 ராஜ சுரேஷ்குமார், தனது நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்தும், தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தும் சாட்சியம் அளிக்காமல் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி தனது புகாருக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி குற்றங்களானது சமாதானமாக குற்றங்களாக உள்ள நிலையில் புகார்தாரரின் புகார் மனுவினை உறுதியூட்டும் வகையில் அரசு தரப்பு சம்பவ சாட்சிகள் சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சியாக சாட்சியமளித்திருப்பதால் உறுதியூட்டம் இல்லாத காவல் அதிகாரியின் சாட்சியத்தையும், ஆவணங்களையும் வைத்து மட்டுமே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. எனவே 1, 2 எதிரிகள் தான் புகார்தாரர் ராஜ சுரேஷ்குமார், அனிஷ்ஐ கெட்டவார்த்தைகளால் பேசி, சிறுகாயங்கள் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18. இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காத நிலையினை



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:53:36 +0530

எதிரிகளுக்கு அளித்து 1,2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323 (2 எண்ணிக்கைகள்) மற்றும் 506(1)ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

1, 2 எதிரிகள் மாண்புமிகு கன்னியாகுமாி மாவட்ட அமா்வு நீதிமன்ற CrlMP No 1995/2019 நாள் 1605.2019 உத்தரவின் படி முன்ஜாமின் பெற்று பிணையில் சென்றுள்ளாா்கள். மேற்படி பிணை முறி பத்திரங்கள் ரத்து செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு ஜூன் மாதம் 21ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M MANI MEGALA

Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:53:45 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
பத்மனாபபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | ராஜ சுரேஷ்குமார் | புகார்தாரர் | 19.06.2023 | -- |
| அ.சா.2 | அனிஷ் | கண்ணுற்ற | 19.06.2023 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சாட்சி | | |
| அ.சா.3 | செந்தமிழ்வாசன் | கண்ணுற்ற சாட்சி | 19.06.2023 | --- |
| அ.சா.4 | ரமேஷ் | உதவி ஆய்வாளர் | 19.06.2023 | 19.06.2023 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| அ.சா.ஆ | சான்றுகளின் விவரம் | தேதி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் | 22.02.2019 |
| அ.சா.ஆ.2 | புகார்மனு | 22.02.2019 |
| அ.சா.ஆ.3 | இண்டிமேசன் | 20.02.2019 |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை | 22.02.2019 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகசர் | 23.02.2019 |
| அ.சா.ஆ.6 | வரைபடம் | 23.02.2019 |
| அ.சா.ஆ.7 | காயச்சான்று | 20.02.2019 |
| அ.சா.ஆ.8 | காயச்சான்று | 20.02.2019 |
| அ.சா.ஆ.9 | பிரிவு மாறுதல் அறிக்கை | 21.5.2022 |

அரசு தரப்பு சான்றுப் பொருட்கள் – இல்லை
எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை
நீதிமன்ற சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

M MANI MEGALA

Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:53:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
பத்மனாபபுரம்.

குறிப்பு –

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

2. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

Dictated on : 20.06.2023

Transcribed on : 20.06.2023

checked on : 21.06.2023

Signed on : 21.06.2023

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS



M MANI MEGALA
Digitally signed by M MANI MEGALA
Date: 2023.06.21 18:54:06 +0530